**சப்பிரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்**
**வலய கல்விப் பணிமனை – எம்பிலிபிடிய**
செயலட்டை

வாரம்- 06
தரம் - 08 | கர்நாடக சங்கீதம் | 07-11/ஜுன்/2021

## இசைகக்ருவிகளின் பிரிவுகள்

- இசைக்கருவிகளின் பயன்கள் : 1. சங்கீத ஒலிகளின் நுட்பங்களை இலகுவாக அறிந்து கொள்ளலாம்
  2. மொழி கலப்பில்லாத தனியான இசையின் மேன்மையை அறிந்து கொள்ளலாம்.
- பண்டைய தமிழ் நூல்களில் பல இசைக்கருவிகளைப் பற்றிக் கூறப்பட்ட போதிலும் தற்போது சில கருவிகளே வழக்கத்தில் உளள்து.
- பரத முனிவர் கி.மு. 4ஆம் நுர்ற்றண்டில் எழுதிய ''நாட்டிய சாஸ்திரம்'' எனும் நூலில் இசைக்கருவிகள் நான்கு பிரிவுகளைக் கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.
- இசைக்கருவிகளின் பிரிவுகள் : 1. நரம்புக் கருவிகள் - தத
  2. துளைக் கருவிகள் - ஸுஷிர
  3. தோற் கருவிகள் - அவனத்த
  4. கஞ்சக் கருவிகள் - கன
- நரம்புக் கருவிகள் : 1. இவை மரத்தினால் ஆக்கப்பட்டு, தந்திகள் இணைக்கப்பட்டடிருக்கும்.
  2. தந்திகளை மீட்டியோ அன்றி உராய்வன் மூலம் நாதம் உருவாக்கப்படுகின்றது.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : தம்புரா, வணீண, வயலின், சித்தார்
- துளைக் கருவிகள் : 1. இவை மரத்தினால் ஆக்கப்பட்டு, துளைகள் கொண்டமைந்திருக்கும்.
  2. இக்கருவிகளின் துளைகள் ஊடாக காற்றைச் செலுத்தி ஊதுதல் மூலம் நாதத்தை உருவாக்கலாம்.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : புல்லாங்குழல், நாதஸ்வரம், மகுடி
- தோற் கருவிகள் : 1. இவை மரத்தினால் செய்யப்பட்டு பதப்படுத்திய தோலினால் மூடப்பட்டிருக்கும்.
  2. இக்கருவிகளின் தோலைக் இறுகக்கட்டி, அத்தோலைத் தட்டுவதன் மூலம் ஒலி பெறப்படுகிறது.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : மிருதங்கம், தவில், தபேலா, கஞ்சிரா
- கஞ்சக் கருவிகள 1. இவை உலோகத்தினால் செய்யப்பட்டவை.
  2. உலோகத்தைத் தட்டுவதன் மூலம் இக்கருவிகளில் ஒலி எழுப்படுகிறது.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : கைத்தாளம், மோர்சிங், சேமக்கலம்

❖ பிரதான வாத்தியம் ( அயன் வாத்தியம் ) : உதாரணம் : வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்

❖ பக்க வாத்தியம் : உதாரணம் : வயலின், மிருதங்கம், சாரங்கி

❖ தாள வாத்தியம் : உதாரணம் : மிருதங்கம், தவில், கஞ்சிரா, மோர்சிங், கடம், தபேலா

❖ ஸ்ருதி வாத்தியம் : உதாரணம் : தம்புரா, சுருதிப்பெட்டி, ஒத்து, ஏக்தார் • வயலின் பிரதான வாத்தியமாகவும் பக்கவாத்தியமாகவும் இசைக்கப்படும்.

## செயற்பாடு 01:

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. இசை கருவிகள் பற்றி குறிப்பிடும் நூல் எது?

02. பரத முனிவர் வாழ்ந்த நூற்றாண்டு எது?

03. இசைக்கருவிகளின் 4 வகைகளையும் தருக.

04 நரம்பு கருவி என்றால் என்ன?

05. நரம்புக்கருவிக்கு உதாரணம் தருக.

06. துளைக்கருவி என்றால் என்ன?

07. துளைக்கருவிக்கு உதாரணம் தருக.

08. தோற்கருவி என்பதனை விளக்குக.

09. தோற்கருவிக்கு உதாரணம் தருக.

10. கஞ்சற்கருவி என்றால் என்ன?

11. கஞ்சற்கருவிக்கு உதாரணம் தருக.

12 .பிரதான வாத்தியம்,பக்க வாத்தியம், தாள வாத்தியம்,
ஸ்ருதி வாத்தியம் என்பவற்றிற்கு உதாரணம் தருக.